உ

# தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம்

வருடாந்த வரவு செலவு

அறிக்கை

1985

# தெல்லிப்பழை
# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

நிர்வாகம் :

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. (தலைவர்)

திரு. சு. சிவவாகீசர்
திரு. க. தணிகாசலம் } இணைச்செயலர்

திரு. அ. சண்முகநாதன் — பொருளாளர்

திரு. நம. சிவப்பிரகாசம்
திரு. பொ. செல்லப்பா } உப தலைவர்

திரு. ச. ஆறுமுகநாதன் — உப பொருளாளர்

திரு. வை. இரத்தினம் — கட்டிட ஆலோசகர்

திருமதி சிவா. பொன்னுத்துரை

திரு. இ. முருகையா

திரு. இ. இலட்சுமிநாதன்

திரு. மு. அருளையா

திரு. நா. திருநாவுக்கரசு

திரு. வே. சின்னத்துரை

திரு. ந. செல்வநாயகம்

திரு. சி. விசுவநாதன்

திரு. ச. விநாயகரத்தினம்

திரு. நா. ஜெகநாதன்

## உத்தியோகத்தர்

திருமதி த. கனகசிங்கம்

செல்வி கா. கந்தையா

செல்வி ம. கணபதிப்பிள்ளை

உ

அம்பாள் துணை

# தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம்
# நான்காம் ஆண்டு அறிக்கை — 1985

துர்க்கை அம்பாள் துணைகொண்டு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிருவாக சபையினுல் 03-02-1982 இல் ஆரம்பிக்கப்பெற்றது துர்க்காபுரம் மகளிர் இல்லம். இவ்வில்லத்தின் நான்காம் ஆண்டு நிறைவெய்திய தும் இச் சந்தர்ப்பத்தில் மகளிர் இல்ல ஆண்டறிக்கையையும், கணக் காய்வு செய்யப்பட்ட வரவு செலவு அறிக்கையையும், சமர்ப்பிப்பதில் எமது நிர்வாக சபை மகிழ்ச்சியடைகின்றது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் ஆற்றிவரும் சமூகப் பணிகளில் மிக முக்கியமான பணியாகக் கருதப்படுவது துர்க்காபுரம் மகளிர் இல்லப் பணியாகும்.

இந்த இல்லம் 1982ஆம் ஆண்டு தைமாதம் ஒன்பது பிள்ளைக ளுடன் ஆரம்பிக்கப் பெற்று இன்று 46 பிள்ளைகளுடன் விளங்குகின்றது. ஆலய வருமானத்திலிருந்தும் அடியார்களின் அன்பளிப்புக்களைக் கொண் டும் பிள்ளைகளின் உணவு, உடை, கல்வி வசதி, வைத்தியம் அனைத் தும் கவனிக்கப்படுகிறது. இவ்வில்லத்தினர்க்கு இருமாடிக் கட்டிட மொன்று ஏறக்குறைய பதினறு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப் பட்டுள்ள பெருமையை இவ்வாண்டு அறிக்கையில் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்ருேம்.

**ஆண்டு விழா :**

இல்லத்தின் 3ஆம் ஆண்டு விழா 4-8-85 இல் நிர்வாகசபைத் தலைவர் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்குத் தெல்லிப்பழை ப. நோ. கூ. ச. தலைவர் திரு. சி. சிவமகாராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பல்துறைப் பணிகளிலும் தேர்ச்சிபெற்ற பிள்ளைகளுக்கு பரிசில்களை வழங்கினுர்கள். அவர்கள் தமது சிறப்புரையில் இல்லத் தைப் பாராட்டி, ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்ற தொடரில் உரையாற்றினுர்கள். விழாவை முன்னிட்டு பிள்ளைகளின் கைப்பணி வேலைகள் மற்றும் தோட்ட உற்பத்திப் பொருட்கள் என் பவை விற்பனைக்கு விடப்பட்டதால் அன்பர்கள் பலரின் ஆதரவும் நிரம்பக் கிடைத்தது.

**நிரந்தர வைப்பு :**

மாவிட்டபுரம் மதவடியைச் சேர்ந்த திரு. இ. கனகசபை அவர்கள், உரும்பராயைச் சேர்ந்த திரு. சி. சின்னையா அவர்கள் (ஈப்போ) ஆகியோர் முறையே ரூ. 10,000-00, ரூ. 20,000-00 நிரந்தர வைப்பிலிட்டு அதன் வட்டியை இப் பிள்ளைகளின் உடை முதலியவற்றிற்கு உதவும்படி கேட்டதற்கிணங்க அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மலேசியாவைச் சேர்ந்த திரு. எம். சின்னத்துரை அவர்கள் ரூபா ஐம்பதினாயிரத்தை நிரந்தர வைப்பிலிட்டு, அதன் வட்டியைப் பிள்ளைகளின் கல்விச் செலவுக்குப் பயன்படுத்தும்படி 1985 நவம்பர் மாதம் இல்லத் தலைவரான துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்கள் மலேசியா சென்றசமயம் வேண்டியுள்ளார்கள். அவர்களின் கோரிக்கையும் நடைமுறைப்படுத்தப் பட்டது. இவர்களின் பரோபகார சிந்தைக்கு என்றென்றும் நன்றியுடையோம்.

**விசேட அன்பளிப்பு :**

ஈப்போவைச் சேர்ந்த திருவாளர் சி. சின்னையா அவர்கள் தமது மனைவியின் பெயரில் துர்க்காபுரம் மகளிர் இல்லக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் விருந்தினரின் விடுதி அறையை அமைத்துக் கொள்வதற்கு ரூ. 55,000-00 வழங்கி அப்பணியை நிறைவேற்றியுள்ளார்.

**மணி விழா அன்பளிப்பு :**

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழாவின்போது சேர்ந்த அன்பளிப்பு ரூபா 30,000-00 துர்க்காபுரம் மகளிர் இல்லக் கட்டடத்தில் மணிவிழா ஞாபகார்த்தமாகப் படிப்பகம் ஒன்று அமைக்க மணிவிழாச் சபை சார்பில் அன்பளிப்புச் செய்துள்ளார்கள்.

**ஊழியர்கள் :**

இவ்வாண்டு இளவாலை மாரீசங்கூடலைச் சேர்ந்த செல்வி காமாட்சி கந்தையா என்பவர் இல்லத்தில் உதவி மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். திருமதி க. கனகசிங்கம், செல்வி ம. கணபதிப்பிள்ளை ஆகியோருடன் செல்வி கா. கந்தையாவும் இல்லப் பணிகளைக் கண்காணித்து வருவது பாராட்டுக்குரியது.

**நன்றி:**

கடந்த இரண்டு ஆண்டுகளாக புதிய இல்லக் கட்டட மேற்பார்வை யாளராகக் கடமை புரிந்து நற்பணியாற்றிய திரு. பொ. முருகதாஸ் அவர்களுக்கு எமது நிர்வாக சபையின் பேரில் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பெற்றோர்களின் சிரார்த்தங்களை முன்னிட்டும், பிள்ளைகளின் பிறந்த தினங்களை முன்னிட்டும், மற்றும் விசேட தினங்களை முன்னிட்டும் இல்லக் குழந்தைகளுக்கு உணவளித்து ஆதரவு நல்கிய அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக. வேண்டிய வேண்டியபோது அன்பளிப்புக்களை நல்கி இப்பணியை ஊக்குவிக்கும் பெருமனம் படைத்தோர் அனைவருக்கும் நன்றி உரித்தாகுக.

மாதந்தோறும் பத்தாயிரம் ரூபாவை நன்கொடையாகக் கொடுத்து உதவுகின்ற ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்துக்கு எமது நன்றி உரித்தாகுக.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை, சுகாதார வைத்தியப் பிரிவு ஆகியவற்றின் மூலம் இல்லக் குழந்தைகளுக்கு வைத்திய உதவி நல்கி வருகின்ற மேற்படி ஸ்தாபனங்களுக்கு எமது நன்றி உரித்தாகுக. மகளிர் இல்லக் குழந்தைகளுக்கு மாதந்தோறும் சவர்க்காரம், சீயாக் காய்ப் பவுடர் முதலிய பொருட்களைக் காலத்துக்குக் காலம் வழங்கி பிள்ளைகளுக்கு ஆதரவளித்துவரும் சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசா J. P. அவர்களுக்கும், சீருடைக்குத் துணி நல்கிய நீர்கொழும்பைச் சேர்ந்த திரு. இளங்கோவர் தில்லைநாதன், திரு. சபாரத்தினம் சூரிய குமார், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த செல்விகள் இராமலிங்கம், கொட்டடல் பரடைஸ் திரு. எஸ். சண்முகராசா, உடுவில் திரு. S. சிவகணேசமூர்த்தி ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இவ் வில்லத்தின் சிறுமிகளது எதிர்காலம் சிறந்து விளங்க பல்வேறு வழிகளிலும் ஆதரவு வழங்கிவரும் அனைவர்க்கும் எமது நன்றியை மேன்மேலும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்

சு. சிவவாகீசர்
க. தணிகாசலம்
இணைச்செயலாளர்

நிர்வாக சபை,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பழை.

# 1985ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வு அறிக்கை

அன்புடையீர்,

நாங்கள் மேற்குறிப்பிட்ட வருடத்திற்கான கணக்குப் பரிசோதனையை மேற்கொண்டு பின்வருவனவற்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

**நிலையான சொத்துக்கள் ரூ. 1360,993-41**

நிலையான சொத்துக்களுக்கான புத்தகம் பரீட்சிக்கப்பட்டது. எனினும் இச் சொத்துக்களின் பெறுமதி எம்மால் நிர்ணயிக்கப்படவில்லை. மகளிர் இல்லத்துக்கான மாடிக் கட்டிடத்திற்குச் சென்ற வருடம் ரூ. 490537-82 செலவழிக்கப்பட்டது. நடைமுறை வருடத்தில் ரூ. 814,324-55 செலவழிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. மேலும் இல்லத்தின் பாவனைக்காக ரூ. 2,014-20 செலவில் உபகரணங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

**நடைமுறைச் சொத்துக்கள்**

நிலையான வைப்பு ரூ. 10,000

தே. சே. வங்கியில் சென்ற வருட வைப்பாக இருந்த ரூ. 32,750இல், ரூ. 22, 750 மீளப் பெறப்பட்டுள்ளது. இவ்வருடம் வைப்பாக ரூ. 10,000 இருப்பதாக எமக்கு வங்கியால் நேரடியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**தே. சே. ச. வங்கி சேமிப்பு கணக்கு 769 ரூ. 32920.**

தே. சே. வங்கியில் புதிதாகச் சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான இவ்வருட வட்டியாக ரூ. 2920 பெறப்பட்டுள்ளது.

**வங்கி நடைமுறைக் கணக்கு**

இலங்கை வங்கி கணக்கு இல. 4923, நிர்வாகத்தின் பேரிலேயே நடைமுறையிலுள்ளது. வங்கி இருப்பு எமக்கு நேரடியாக வங்கியால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**கையிருப்பு ரொக்கம் ரூ. 395-12**

தனாதிகாரியிடமுள்ள இருப்புப் பணம் ரூ. *395-12*, *01-01-1986* காலை எமது பிரதிநிதிகளால் எண்ணிப்பார்த்துச் சரியெனக் காணப் பட்டது. மேலும் *04-03-85* அன்று நடைபெற்ற கொள்ளையில், ரூ. *5075-98* கொள்ளையடிக்கப்பட்டதாக நிர்வாகசபையால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**வரவு**

இவ்வருட இல்ல நிதியாக ரூ. ***172,365-03*** பெறப்பட்டுள்ளது. இவ் வரவுக்கான பிரதிப் பற்றுச்சீட்டுக்கள் (*970* தொடக்கம் *1000* வரை, *1* தொடக்கம் *374* வரை) புத்தகங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டுச் சரி யெனக் காணப்பட்டன. மேலும் தேவஸ்தானத்தால் அன்பளிப்பாக ரூ. ***106,000*** உம் இல்லக் கட்டிட நிதிக்காக ரூ. ***702,920/-*** வழங்கப்பட் டுள்ளன. இதற்கான பிரதிப் பற்றுச் சீட்டுக்கள் புத்தகங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டுச் சரியெனக் காணப்பட்டன.

மேலும் நிர்வாகசபைத் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாவில் நன்கொடையாகப் பெறப்பட்ட பணத்தில் ரூ. ***25,000***ஐ, இல்லத்துக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

மேலும் பொருட்காட்சி வரவாக ரூ. ***2872-50***உம், பரிசளிப்புக் கான அன்பளிப்புக்காக ரூ. ***2250***உம், வட்டிவரவாக ரூ. ***4000***உம், நானாவித வரவுகளாக ரூ. ***2400-70*** உம் பெறப்பட்டுள்ளன.

**செலவு**

(1) நிர்வாக பராமரிப்புச் செலவுக்கான உறுதிச் சீட்டுக்கள் ஒப்பீடு செய்யப்பட்டுச் சரியெனச் காணப்பட்டுள்ளன.

(2) மூலதனச் செலவுக்கான உறுதிச் சீட்டுக்கள் ஒப்பீடு செய்யப் பட்டுச் சரியெனக் காணப்பட்டுள்ளன.

(3) மாடிக் கட்டிடம் செலவுக்கான உறுதிச் சீட்டுக்கள் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன.

**பொது**

எம்மால் ஒப்பீடு செய்யப்பட்ட பற்றுச்சீட்டுப் புத்தகங்களும் அவற்றிற்கான பதிவுப் புத்தகங்களும்.

(1) மகளிர் இல்ல நிதிப் பற்றுச்சீட்டுப் புத்தகம்.

(2) காசுப் புத்தகம்.

(3) பேரேடு.

(4) நாட்குறிப்பு புத்தகம்.

தங்கள் நன்றியுள்ள

**Kreston M. N. S. & Co.**

# துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை

## 31-12-1985இல் ஐந்தொகை

| | | | |
|---|---|---|---|
| **பொது நிதி** | | | |
| கடந்த வருட மீதி | 455,117-78 | | |
| வருமானச் செலவுக் கணக்கால் | 96,879-45 | | |
| | 551,997-23 | | |
| கட்டிட நிதிக்கு மாற்றம் | 295,936-37 | | 256,060-86 |
| **மகளிர் இல்ல கட்டிட நிதி** | | | |
| கடந்தவருட மீதி | | 200,000-00 | |
| இவ்வருட பெறுவன—பொதுமக்கள் | 702,920-00 | | |
| தேவஸ்தானம் | 106,000-00 | | |
| பொதுநிதி மாற்றம் | 295,936-37 | 1,104,856-37 | 1,304,856-37 |
| | | | 1,560,917-23 |
| **நிலையான சொத்துக்கள் (குறிப்பு – 1)** | | | 1,360,993-41 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| தேசிய சேமிப்பு வங்கி நிரந்தர வைப்பு | | 10,000-00 | |
| தேசிய சேமிப்பு வங்கி சேமிப்புக் கணக்கு இல. 769 | | 32,920-00 | |
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு இல. 4923 | | 156,608-70 | |
| கையிருப்பு—காசு | | 395-12 | 199,923-82 |
| | | | 1,560,917-23 |

சரியென அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**இறெஸ்ரன் எம். என். எஸ். அன் கோ.**
பட்டயக் கணக்காளர்

**தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்

**அ. சண்முகநாதன்**
தனாதிகாரி

# துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை

## 31-12-85இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானச் செலவுக் கணக்கு

வருமானம்

| | | |
|---|---|---|
| *அன்பளிப்பு வரவு* | *172,365-03* | |
| *மணிவிழா ஞாபகார்த்த அன்பளிப்பு செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி* | *25,000-00* | |
| *பரிசளிப்புக்கான அன்பளிப்பு* | *2,250-00* | |
| *ஆண்டுவிழா பொருட்காட்சி வரவு* | *2,872-50* | |
| *வட்டி வரவு* | *4,170-00* | |
| *நாணுவித வரவு* | *2,400-70* | *209,058-23* |

செலவினம்

| | | |
|---|---|---|
| *நிர்வாகச் செலவு—பெறுவனவு கொடுப்பனவு கணக்கால்* | *101,136-39* | |
| *பெறுமானத் தேய்வு (குறிப்பு 1)* | *5,966-41* | |
| *கொள்ளையடிக்கப்பட்ட பணம்* | *5,075-98* | *112,178-78* |
| *செலவுக்கு மிஞ்சிய வருமானம்* | | *96,879-45* |

**வங்கி இணக்கக் கூற்று**

இலங்கை வங்கி 4923

| | | |
|---|---|---|
| *வங்கிக் கூற்றின்படி இருப்பு* | | *159 583-70* |
| கூட்டுக: | *சேர்க்கப்படாத காசோலை* | *100-00* |
| | | *159,683-70* |
| கழிக்க: | *மாற்றப்படாத காசோலை 730* | *3,075-00* |
| | *புத்தகத்தின்படி இருப்பு* | *156,608-70* |

# துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை

## 31-12-1985 இல் முடிவடைந்த வருடத்திற்கான பெறுவனவு கொடுப்பனவு கணக்கு

| | | |
|---|---|---|
| **01-01-1985இல் நிலுவை** | | |
| இலங்கை வங்கிக் கணக்கு 4923 | 68,554-50 | |
| நிர்வாகம் — காசு | 3,192-21 | 71,746-71 |
| **அன்பளிப்பு வரவு** | | |
| இல்லநிதி | 172,365-03 | |
| தேவஸ்தானம் | 106,000-00 | |
| மகளிர் இல்ல கட்டிட நிதி | 702,920-00 | 981,285-03 |
| மணிவிழா ஞாபகார்த்த அன்பளிப்பு — செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி | | 25,000-00 |
| பரிசளிப்புக்கான அன்பளிப்பு | | 2,250-00 |
| பொருட்காட்சி வரவு | | 2,872-50 |
| வட்டி வரவு | | 4,000-00 |
| நானாவித வரவு | | 2,400-70 |
| நிரந்தர வைப்பு மீளல் | | 22,000-00 |
| | | 1,111,554-94 |
| **நிர்வாகச் செலவு** | | |
| அரிசி, மா, பாண் முதலியன | 27,344-85 | |
| மரக்கறி. தேங்காய் ஆகியன | 23,297-16 | 50,642-01 |
| விறகு | | 3,470-50 |
| தேயிலை, சீனி, பால் ஏனையவை | | 11,614-25 |
| சம்பளச் செலவு | | 5,950-00 |
| அச்சுக்கூலி. கந்தோர் செலவுகள் | | 1,476-50 |
| துணிகள், ஆடைகள், தீபாவளிச் செலவு ஆகியன | | 7,267-55 |
| கொப்பி, பேனை, ஏனையவை | | 899-25 |
| மருந்துச் செலவு | | 539-50 |
| டோபி செலவு | | 1,187-00 |
| பாபர் செலவு | | 164-00 |
| பிரயாணச் செலவு | | 1,033-60 |
| சவர்க்காரம், சம்பூ ஏனையவை | | 2,642-70 |
| வங்கிச் செலவு | | 268-13 |

| | | |
|---|---|---|
| ஆண்டுவிழா, பரிசளிப்பு விழா, பொருட்காட்சி செலவு (குறிப்பு 3) | | 4,075-70 |
| தபால் செலவு | | 9-20 |
| கணக்காய்வாளர் கட்டணம் | | 630-00 |
| பாடசாலை வசதிக் கட்டணம் | | 911-00 |
| திருத்தச் செலவு | | 118-50 |
| தட்சணை அன்பளிப்பு செலவு | | 2,250-25 |
| விளம்பரச் செலவு | | 100-00 |
| அரிசி, மா, திரியல் கூலி | | 525-25 |
| கோசாலை பராமரிப்பு செலவு | | 764-25 |
| நானாவித செலவுகள் | | 4.597-25 |
| | | 101,136-39 |
| கொள்ளையடிக்கப்பட்ட பணம் | | 5,075-98 |
| மூலதனச் செலவு | | |
| புதிய மாடிக்கட்டிடம் (குறிப்பு 2) | 814,324-55 | |
| உபகரணங்கள் | 2,014-20 | |
| தேசிய சேமிப்பு வங்கி சேமிப்பு கணக்கு 769 | 32,000-00 | 848,338-75 |
| 31-12-1985இல் நிலுவை | | |
| இலங்கை வங்கிக் கணக்கு 4923 | 156,608-70 | |
| கையிருப்பு காசு | 395-12 | 157,003-82 |
| | | 1,111,554-94 |

# துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை

## குறிப்பு—1. நிலையான சொத்துக்கள்

| | விதம் | வருடத் தொடக்க மீதி | நடைமுறை வருடத்திற்கான சேர்வு | இவ்வருட தேய்மானம் | மீதி |
|---|---|---|---|---|---|
| கட்டிடம் | 10 % | 48,042-36 | — | 4,804-24 | 43,238-12 |
| தளபாடம் | 10 % | 6,799-50 | — | 679-95 | 6,119-55 |
| தையல் மெசின் | 12½% | 2,756-25 | — | 344-53 | 2,411-72 |
| உபகரணம் | 5 % | 2,316-14 | 2,014-20 | 115-31 | 4,214-53 |
| மாடிக்கட்டிடம் (குறிப்பு 2) | — | 490,531-82 | 814,324-55 | — | 1,304,856-37 |
| அன்ரனு | 12½% | 175-00 | — | 21-88 | 153-12 |
| | | 550,621-07 | 816,338-75 | 5,966-41 | 1,360,993.41 |

## குறிப்பு 2. புதிய மாடிக் கட்டடம்

| | வருடத் தொடக்க மீதி | நடைமுறை வருடத்திக்கான சேர்மானம் | மீதி |
|---|---|---|---|
| சீமெந்து | 117,500-00 | 166,600-70 | 284,100-70 |
| கல் | 36,427-50 | 15,475-00 | 51,902-50 |
| மணல் | 27,700-00 | 20,762-50 | 47,462-50 |
| கம்பி | 138,387-25 | 32,702-05 | 171,088-30 |
| மேசன்கூலி | 92,177-20 | 210,481-70 | 302,658-90 |
| அஸ்பெஸ்ட்ஸ் சீற் | 38,545-20 | 10,271-50 | 48,816-70 |
| மரம், சிலாகை | 15,713-50 | 14,594-00 | 30,307-60 |
| பைப் இணைப்புகள் | 3,588-00 | 35,775-30 | 39,363-30 |
| வாளி, கடகம் ஏனையவை | 5,526-37 | 300-00 | 5,826-37 |
| மேற்பார்வையாளர் சம்பளம் | 10,000-00 | 100,00-00 | 20,000-00 |
| நிலம் துப்பரவு செய்ய | 1,947-50 | — | 1,947-50 |
| லொறிக்கூலி | 2,215-00 | 3,617-00 | 5,832-00 |
| ஏனைய செலவுகள் | 804-30 | 3,006-95 | 3,811-25 |
| யன்னல், கதவுநிலை, அலுமாரி | | 69,453-00 | 69,453-00 |
| மின்சார இணைப்புகள் | | 35,130-35 | 35,130-35 |
| மாபிள், கல், காவி | | 44,444-00 | 44,444-00 |
| இரும்பு கிறில் | | 21,037-00 | 21,037-00 |
| இரும்பு (கூரை வேலை) | | 28,200-00 | 28,200-00 |
| கூரை வேலை | | 85,984-00 | 85,984-00 |
| பெயர் கல் | | 1,132-50 | 1,132-50 |
| வெள்ளையடிக்க | | 5,358-00 | 5,358-00 |
| | 490,531-82 | 814,324-55 | 1,304,856-37 |

குறிப்பு — 3. ஆண்டு விழா, பரிசளிப்பு விழா, பொருட்காட்சிச் செலவு.

| | |
|---|---|
| பரிசளிப்புப் பொருட்கள் | 2,005-50 |
| உணவுப்பொருட்கள் | 695-60 |
| பூ செய்த வகையில் | 100-00 |
| முத்திரைகள் | 33-60 |
| நோட்டீஸ் அச்சிட்ட செலவு | 75-00 |
| படப்பிடிப்பு | 555-00 |
| ஏனைய செலவுகள் | 536-00 |
| போக்குவரத்துச் செலவு | 75-00 |
| | 4,075-70 |

திருமகள் அழுத்தகம், சுன்னாகம் — 7905/8-86